# அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை

(புதிவு எண் : 982 / 2012) **உயர்கல்விக்கு உதவும் கரங்கள்.**

## சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருப்பவர்கள் உயர்வதற்கான ஒரே கருவி கல்வி

**கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன், அறக்கட்டளைத் தலைவர்**



உலகளவில் இந்தியா பெருமளவில் இளைஞர்களைக் கொண்ட நாடு. அனைவருக்கும் உயர்கல்வி கிடைக்கச் செய்வதால் நாட்டின் பல்வேறு வளர்ச்சிக்கும், தனிநபர் வருமான உயர்வுக்கும், சமுதாய முன்னேற்றத்துக்கும் வழிவகை காண முடியும். உயர்கல்விக்கான மொத்த சேர்க்கை விகிதம் (Gross Enrolment Ratio) GER உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில், இந்தியா பின்தங்கியுள்ளது. பள்ளிக் கல்வியில் இந்தியா முன்னேற்றம் அடைந்திருந்தாலும், குடும்ப வறுமையின் காரணமாக ஏராளமான மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரமுடியாமல் இருக்கின்றனர். தமிழகத்தில் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம் (வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை) உயர்கல்வியில் முன் மாதிரி மாவட்டமாக விளங்க வேண்டுமென்பது என் விருப்பம். நமது மாவட்டத்தில் மேல்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்த அனைத்து ஏழை எளிய மாணவர்களும் இடைநிற்றலின்றி உயர்கல்வி பயில உதவி செய்ய வேண்டும் என்னும் சமூகப் பொறுப்புணர்வுடன் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் **அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை** வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. இதுவரை அறக்கட்டளையின் கல்வி உதவித்தொகை பெற்றவர்களில் 3-இல் 2 பங்கு பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் குழந்தைத் திருமணங்களும், வளர் இளம்பெண்கள் குழந்தை பெறுவதும் வெகுவாகக் குறைந்து வருகிறது.

ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு உயர்கல்வி அளித்துவிட்டால், அவர் படித்து நல்ல வேலையில் அமர்ந்து தன்னுடைய சகோதர, சகோதரிகளைப் படிக்க வைத்து, ஒவ்வொரு குடும்பமும் முன்னேறும்போது உயர்கல்வியும், வேலைவாய்ப்பும், மாவட்டத்தின் வளர்ச்சியும் ஒரு சேர உயரும் என்பது என் நம்பிக்கை. அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை போன்று தமிழகத்தில் மற்ற மாவட்டங்களில் உள்ளவர்களும் ஏழை மாணவர்கள் உயர்கல்வி பயில உதவி செய்யத் தொடங்கிவிட்டால் தமிழகம் உயர்கல்வியில் இந்தியாவின் முன்மாதிரி மாநிலமாக விளங்கும்.

## அறக்கட்டளையின் செயல்பாடுகள்

- உயர்கல்வியின் தேவை மற்றும் சிறப்பைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- மேல்நிலைப் பள்ளிக் கல்வியில் தேர்ச்சிபெற்ற, பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவ, மாணவியர்களுக்கு உயர்கல்வி பயிலக் கல்வி உதவித்தொகை வழங்குதல்.
- இளைஞர்களுக்குத் தேவையான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்து, வேலை வாய்ப்புக்கான தகுதிகளை மேம்படுத்துதல்.
- இளைஞர் சமுதாயத்தை ஒரு திறன்மிக்க ஆற்றல் வாய்ந்த மனிதவளமாக உருவாக்குதல்.

## அறக்கட்டளை உறுப்பினர்கள்



## *"HEARTS" (Higher Education for All to Realize Transformation of the Society)* திட்டம்

இத்திட்டத்தின் மூலம் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் பழங்குடியின மக்கள் வசிக்கக்கூடிய ஜவ்வாதுமலை ஒன்றியத்துக்குட்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் +2 முடித்த பொருளாதார வசதியில்லாத 6,824 மாணவர்கள் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் பொறியியல், மருத்துவம், கலை மற்றும் அறிவியல் உள்ளிட்ட பாடப்பிரிவுகளில் தங்குதடையின்றிப் படிக்கக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை 7 கோடியே 27 இலட்சம் ரூபாய் உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த உதவித்தொகை பெற்றவர்களில் 3 இல் 2 பங்கு பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## *"ASPIRE" (Action to Support Poor student In Reaching Excellence)* திட்டம்

இத்திட்டத்தின் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மாணவர்கள் உயர்கல்வி பயில வாய்ப்பாக ஒவ்வொரு மாணவர்க்கும், ஒரு கல்விக் கொடையாளரை அறக்கட்டளையின் மூலம் இணைக்கும் திட்டம் செயல்பட்டு வருகின்றது. அதன்படி,

- கொடையாளர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்களின் உயர்கல்விக் கட்டணத்தை ஏற்கலாம்.
- தங்களுக்குத் தெரிந்த கல்லூரியில் தங்களின் பரிந்துரையின் பேரில் மாணவர்களுக்குக் கட்டணம் இல்லாமல் படிக்க உதவி செய்யலாம்.
- தங்களுக்குத் தெரிந்த (அ) தாங்கள் பணிபுரியும் நிறுவனத்தின் மூலமும் நிதியைப் பெற்று அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கலாம்.

**ASPIRE-திட்டம் பற்றிய காணொளியைக் காண QR Code-யை SCAN செய்யவும்**

(கொடையாளர்கள் தங்களால் இயன்ற நன்கொடை வழங்கி ஏழை மாணவர்களின் உயர்கல்விக் கனவை நனவாக்கலாம்).

## *சமூக நல நிதிகள் அறக்கட்டளை கல்வி உதவித்தொகை வழங்குதல்*

***(Social Welfare Funds Trust, Chennai) SWF Trust***



விஐடியில் 2004 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பம் படித்துப் பட்டம் பெற்ற முன்னாள் மாணவர்களால் கடந்த 17 ஆண்டுகளாகச் சென்னையில் **SWF Trust** செயல்பட்டு வருகிறது. கடந்த ஆகஸ்ட் 6 ஆம் நாள் கல்வி உதவித்தொகை வழங்கும் காணொளி நிகழ்வுக்கு விஐடி வேந்தரும் அறக்கட்டளைத் தலைவருமான கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமை வகித்தார். **SWF Trust** தலைவர் திரு. வி.ஜே. இரமேஷ், செயலாளர் திரு. எல். சதிஷ்குமார், பொருளாளர் திரு. சி. லட்சுமிகாந்த் மற்றும் **SWF Trust** உறுப்பினர்களும், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் கடந்த மூன்று ஆண்டுகளாகக் கல்வி உதவித்தொகை பெற்று, இவ்வாண்டு (2019-2020) கல்லூரியில் இறுதியாண்டு படிக்கக்கூடிய தேர்ந்தெடுக்கப்பட்ட 26 மாணவர்கள் (10 ஆண்கள் - 16 பெண்கள்) பொறியியல், மருத்துவம், கலை, அறிவியல், வேளாண் மற்றும் செவிலியர் பிரிவுகளில் படிக்கும் மாணவர்களுக்கு அவர்களின் இறுதியாண்டுக்கான கல்விக் கட்டணம், விடுதி மற்றும் உணவுக்கான கட்டணம் 14 இலட்சத்து 15 ஆயிரம் முழுவதையும் **SWF Trust, Chennai** வழங்கியது.

## அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உதவித்தொகை வழங்குதல்





கல்வியுடன் ஒழுக்கம், அறநெறியை கற்றுக்கொள்ள வேண்டும்
மாணவர்களுக்கு நீதிபதி கிருபாகரன் அறிவுரை
மாணவர்கள் கல்வியோடு அறநெறியும் கற்றுக்கொள்ள வேண்டும்
மாணவர்கள் கல்வியுடன் ஒழுக்கம், அறநெறிகளை கற்றுக்கொள்ள வேண்டும்
வி.ஐ.டி. விழாவில் ஐகோர்ட் நீதிபதி கிருபாகரன் பேச்சு
கல்வியுடன் ஒழுக்கம், அறநெறியைக் கற்பது அவசியம்

2019-2020 கல்வி ஆண்டுக்கான இரண்டாம் பகுதி கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி கடந்த அக்டோபர் 31 அன்று காணொளி மூலம் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு விஐடி வேந்தரும், அறக்கட்டளைத் தலைவருமான கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமை வகித்தார். நிகழ்வின் சிறப்பு விருந்தினராகச் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு. நீதியரசர் ந. கிருபாகரன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். விழாவில் 1,070 மாணவ, மாணவிகளுக்கு 64 இலட்சம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

## கல்வி உதவித்தொகை பெற்ற மாணவர்களின் குரல்

### செ. சுபாஷிணி



என்னுடைய தந்தை முடிதிருத்தும் தொழிலாளி, திருமணி கிராமத்தில் வசித்து வருகிறேன். இலத்தேரி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் +2 படிக்கும்போது என்னுடைய பள்ளிக்கு அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை அலுவலர்கள் வருகை தந்து +2 படிக்கும் மாணவர்களுக்கு உயர்கல்வி பற்றி விழிப்புணர்வு அளித்தனர். பொருளாதார வசதியில்லாத மாணவர்கள் உயர்கல்வி பயில அறக்கட்டளை உதவித்தொகை வழங்கி வருவதாகக் குறிப்பிட்டனர். நான் +2 முடித்து வேலூர் டி.கே.எம் மகளிர் கல்லூரியில் பி.ஏ. வரலாறு முதலாமாண்டு பயிலும்போது, அறக்கட்டளையில் உதவித்தொகை விண்ணப்பம் பெற்று விண்ணப்பித்தேன், அறக்கட்டளையில் நேர்முகத்தேர்வுக்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, என் வீட்டுக்கு வருகைதந்து குடும்பச் சூழ்நிலையை நேரடியாகப் பார்த்து எனக்கு உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். இப்போது நான் கல்லூரிப்படிப்பை முடித்துக் காட்பாடியில் ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறேன். என் தங்கையும் இப்போது அறக்கட்டளையின் கல்வி உதவித்தொகை பெற்று வேலூர் டி.கே.எம் மகளிர் கல்லூரியில் பி.ஏ. வரலாறு மூன்றாம் ஆண்டு படித்து வருகிறார். எங்களுடைய உயர்கல்விக் கனவை நனவாக்கிய அறக்கட்டளைக்கு எங்கள் குடும்பத்தின் சார்பாக நன்றி.

### கோ. அஜித்குமார்



நான் காட்பாடி அடுத்த கரிகிரி கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னுடைய குடும்பம் பொருளாதார வசதியில்லாத குடும்பம், என்னுடைய அப்பா உடல் நலிவுற்று இறந்துவிட்டார். அம்மா விவசாயக் கூலி வேலை செய்து எங்களைப் படிக்க வைத்து வருகின்றார். நான் +2 முடித்து வேலூரில் உள்ள NTTF-இல் Dip. in Tool & Die Making பாடப்பிரிவில் சேர்ந்த பின்பு, அறக்கட்டளையில் கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பித்தேன். என்னுடைய குடும்பச் சூழலை விசாரித்து எனக்குக் கல்வி உதவித்தொகை வழங்கினார்கள். என் தங்கையும் அறக்கட்டளையின் உதவித்தொகை பெற்றுக் காட்பாடி அக்ஸிலியம் மகளிர் கல்லூரியில் பி.எஸ்.சி. வேதியியல் மூன்றாம் ஆண்டு படித்து வருகிறார். நான் படிப்பு முடித்து இராணிப்பேட்டை சிப்காட்டிலுள்ள கம்பெனியில் இளநிலைப் பொறியாளராகப் பணிபுரிகிறேன். எனக்கும், என் தங்கைக்கும் உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கி எங்களுக்கு ஊக்கமளித்த அறக்கட்டளைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## கல்வி உதவித்தொகை பெற்றவர் : 6,824

- இவர்களில் 4,505 (66%) பெண்கள்.
- 4,633 (67.09%) முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்கள்.
- 6,356 (93.15%) கலை மற்றும் அறிவியல், பொறியியல் மற்றும் செவிலியர் படிப்பு படிக்கும் மாணவர்கள் அதிகமாகப் பயன் பெற்றிருக்கிறார்கள்.
- 6,196 (90.80%) மாணவர்கள் அரசு / அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்றவர்கள்.
- 16.04% தாய் / தந்தை இழந்த பயனாளிகள்.
- 81% மாணவர்கள் +2 இல் 80% க்கும் குறைவான மதிப்பெண்கள் பெற்றவர்கள், அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள் மட்டுமின்றிக், குறைவான மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கும், அறக்கட்டளை அவர்களின் பொருளாதாரச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு உதவி வருகிறது.
- இதுவரை 3,999 மாணவர்கள் இளங்கலைப் பட்டப்படிப்பை முடித்துள்ளார்கள்;
    - 1,327 மாணவர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.
    - 731 மாணவர்கள் முதுகலைப் படிப்புகளில் சேர்ந்து பயின்று வருகிறார்கள்.



**இந்த மகத்தான சேவையில் தாங்களும் பங்கு பெற்றுத் தங்கள் வீட்டில் நடக்கும் பிறந்தநாள், திருமணநாள் மற்ற இனிய நிகழ்வுகளின் மகிழ்ச்சியோடு அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கி ஏழை மாணவர்களின் உயர்கல்விக்கு உதவலாம். இதன் மூலம் அவர்களின் வாழ்வில் ஆக்கப்பூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.**

**தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரிச் சட்டம் 80G பிரிவின் கீழ் வரிவிலக்கு உண்டு.**

### முகவரி

**திட்ட ஒருங்கிணைப்பாளர்,**
அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை,
அறை எண்: 215, டாக்டர். எம்ஜிஆர். பிளாக்,
விஐடி வளாகம், வேலூர் - 632 014.
தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி : 0416 - 224 7777, 220 2196

### வங்கி விவரம்

**Universal Higher Education Trust (UHET),**
A/C. No : 6063960011,
Indian Bank, VIT Branch,
Katpadi, Vellore Dt. - 632 014.
Swift Code : IDIBINBBTSY
IFSC Code : IDIB000V086

இசைபட வாழ்தல் ஈதலே என்பதை உணர்வோம்!
மகிழ்வித்து மகிழ்ந்திருப்போம்!